திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பாலைக்குடியிலே கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் உள்ளனர். அது ஒரு பெரிய நகரத்தைப்போல இருக்கின்றது. அந்த ஊரிலே ஒரு சிறிய மருந்தகம் கூட இல்லை. நீண்ட நாட்களாக இந்தப் பகுதியிலே ஒரு அரசு மருத்துவமனை வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. அது விரைவில் கொண்டுவரப்படுமா என்று தெரிவித்து, அதற்கான ஏற்பாட்டை அரசு உடனடியாக செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்போதுதான் அரசு மருந்தகத்தை ஏற்படுத்துவதற்காக அரசாணை போட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு அதற்காக Government have also sanctioned a recurring expenditure of Rs. 20,000. 20 ஆயிரம் ரூபாயை அதற்காக ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சருக்காகவும், நான் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சருக்காக 7 ஆயிரம் ரூபாயும், பர்னிச்சர் வாங்குவதற்கு 8 ஆயிரம் ரூபாயும் போட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நாம் உடனடியாக மருத்துவமனையைத் தனியாக ஏற்படுத்த முடியாது. மருந்தகத்தைத் துவக்க இருக்கின்றோம். அதற்குப் பிறகு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மருத்துவமனை வயபிளாக இருக்குமா என்று பார்த்து, அதை ஆரம்பிக்கலாம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தகத்திற்கு ஒரு சில படுக்கைகளையாவது சாங்ஷன் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்போது அது மருத்துவமனையாக ஆகிவிடும். நான் ஏற்கனவே சொன்னதைப் போல, பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

காஞ்சிபுரம் அரசு மருத்துவமனை.

* வினா எண். 14—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அரசினர் மருத்துவமனைக்கு சராசரியாக ஒரு நாளைக்கு வரும் புறநோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) உள் நோயாளிகள் எண்ணிக்கை (படுக்கை) அனுமதிக்கப்பட்டுள்ளது எவ்வளவு?

(இ) எத்தனை உள்நோயாளிகள் தற்போது உள்ளனர்?

1982 செப்டம்பர் 7]

(ஈ) உள் நோயாளிகள் படுக்கை எண்ணிக்கையினை அதிகரிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) 2522 (ஆ) 257 (இ) 368 (ஈ) தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 300 ஆக உயர்த்த புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள அரிமா சங்கம் அளித்த நன்கொடை மூலமாக கட்டப்பட்ட நான்கு தணிவகை அறைகள் 'சி' பிரிவு வார்டாக அமைக்கப்பட்டு அதில் 8 படுக்கைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பும் மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநரின் ஆய்விலுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கும், அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனைக்கும் வளர்ச்சி ஏற்பட என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரப்பட்டியில் இருக்கக்கூடிய காஞ்சிபுரம் அருகில் இருக்கக்கூடிய அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்காக 10 லட்சம் ரூபாய் provision of equipments to Arignar Anna Memorial Cancer Institute, Karapatti 10 இலட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாக provision of H.T. supply to the Government headquarters hospital, Kancheepuram. அதற்கு 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலைகள் துவங்குவதற்கு நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். அது அல்லாமல் டி.எம்.ஓ. குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கு உத்தரவு போட்டு இருக்கிறோம். காஞ்சிபுரம் தலைமை மாவட்ட மருத்துவ மனையிலே ஹோமியோபதி பிரிவை துவக்க உத்தரவு போட்டு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அரசினர் மருத்துவமனையின் வளர்ச்சிக்காக 35 இலட்சம் ரூபாய்க்கு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளதா? அப்படி எனில் அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது ஏற்கனவே சில தொகைகளை குறிப்பிட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், அங்கே இன்னும் வளர்ச்சிக்காக பல பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார்கள். அவை அரசினுடைய கவனத்தில் தற்போது இருக்கின்றன.

[1982 செப்டம்பர் 7

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு புற்று நோய் இருக்கின்ற நோயாளிகள் — சமீபத்திலே என்னுடைய கிராமத்திலே ஒருவர் சென்றார் — ஆனால் அந்த நோயாளிகளுடைய சதையை எடுத்து அவர்களிடத்திலே கொடுத்து வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனைக்குச் சென்று டெஸ்ட் செய்து ரிசல்ட் வாங்கி வரும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது அவைகள் ஆராய்ந்து கண்டுபிடிக்கின்ற கருவிகள் அந்த புற்று நோய் மருத்துவமனையில் இல்லையா? அப்படி இல்லையென்றால் அரசு அதற்கான வசதிகள் செய்ய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காரப்பட்டியில் இருக்கக்கூடிய அண்ணா பெயரால் இயங்கிக் கொண்டு வருகின்ற புற்று நோய் மருத்துவ மனையில் மிகச் சிறப்பான கருவிகள் இருக்கின்றன. நான்கூட ஒரு வாரத்திற்கு முன்பாக அங்கே சென்று பார்த்தேன். அங்கே 2 நோயாளிகள் சி.எம்.சி. மருத்துவமனையில் இருந்து லெட்டர் மூலமாக இந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதைப் பார்த்தேன். ஆகவே இது ஒரு குறிப்பிட்ட டெஸ்ட் பண்ணுவதற்கு அங்கே வசதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். அது குறித்து முன் விவரத்தைக் கொடுத்தால் நான் இந்த பர்ட்டிகுலர் டெஸ்ட் அங்கே செய்யாமல் ஏன் அங்கே அனுப்பியிருக்கிறார்கள் என்று பார்க்கமுடியும். ஆனால் பல்வேறு மருத்துவமனைகளில் இருந்து கூட சி.எம்.சி. மருத்துவமனையில் இருந்துகூட ஏராளமான நோயாளிகள் அங்கே முடியாது நீங்கள் காஞ்சிபுரம் மருத்துவ மனைக்குச் செல்லுங்கள் என்று வந்துகொண்டிருக்கிறார்கள். இப்போதுகூட அங்கே ஒரு 100 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் 150 நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இன்னும் 100 படுக்கைகள் உயர்த்து வதற்காக ஏற்பாடுகள் செய்து வெகு விரைவில் நடைபெறும்.

Medical Facilities to Adhivasi areas.

*Q. No. 15—THIRU S. SEMMALAI: Will the Hon. the Minister for Health be please to state:

(a) Whether any special provision has been made under Sixth Five Year Plan to provide medical facilities in the Adhivasis, areas; and

(b) If so, the details there of?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். (ஆ) இம் மாநிலத்திலுள்ள ஆதிவாசிகளுக்கும், மலைவாழ் மக்களுக்கும் மருத்துவ வசதி கொடுக்கும் பொருட்டு ரூ. 30.25 இலட்சம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடர்ச்சிப் பணியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.